**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT COURT MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO. 208/2017 PW2**

Name : அழகுமலை
Father's name : முத்துச்சாமி
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 26th November 2018

**முதல் விசாரணை**

நான் தற்போது அச்சம்பத்து பஜனை மடை தெருவில் குடியிருந்து சொந்தமாக நார் உறிக்கும் தொழில் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சாகுல்அமீது என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். 2014 ம் வருடம் எம். எம் கல்யாண சுந்தரம் தோட்டத்தில் நார் உறிப்பதற்காக சென்றிருந்தேன். ஆஜர் எதிரிகளில் முதல் எதிரியும், 3 வது எதிரியும் பிடித்துக்கொள்ள 2 ம் எதிரி இறந்துபோன நபரை கத்தியால் தொண்டையில் குத்தினார். ஆஜர் எதிரிகளில் 3 வது எதிரி கீழே இருந்து ஒரு பாறையை தூக்கி தலையில் போட்டார். சத்தம் கேட்டு தோப்பில் காவல்காரர் ஆறுமுகமும் அங்கு வந்தார். நாங்கள் இருவரும் தான் அந்த கொலையை பார்த்தோம். நாங்களும் ஒரு குரல் கொடுத்தோம். எதிரிகள் மேற்குபுறமாக சென்று மூங்கில் மரங்களுக்கு இடையே உள்ள வாய்க்காலின் மேற்கே சென்று கிளம்பி விட்டார்கள். சம்பவம் நடந்தபோது மாலை 4.30 இருக்கும். 1/2 மணிநேரம் எங்களுக்கு மன அடைப்பு இருந்தது. பிறகு 1/2 மணி நேரம் கழித்து ஆறுமுகம் தோப்பின் உரிமையாளர் சரவணன் , ரமணன் ஆகியோர்களுக்கு போன் செய்தார். 2 மாதம் கழித்து மதுரை மத்திய சிறையில் வைத்து அடையாளம் அணிவகுப்பு நடத்தினார்கள். 15 பேர்களை நிற்க வைத்தார்கள். நாங்கள் அவர்களை சரியாக 3 முறை அடையாளம் காண்பித்தோம். இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறுவிசாரணை**

இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு,
அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து
பார்க்கப்பட்டு/சாட்சிக்கு வாசித்து காண்பித்து
அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்/கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி
மதுரை

**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT COURT MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
**SESSIONS CASE NO. 208 /2017 PW3**

Name : சரவணன்
Father's name : எம். எம் கல்யாணசுந்தரம்
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 26th November 2018

**முதல் விசாரணை**

நான் தற்போது 3/2 தேனி மெயின்ரோடு அச்சம்பத்து என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன சாகுல்அமீதை தெரியாது. ஆஜர் எதிரிகளை நான் பார்த்தது இல்லை. கடந்த 26-09-2014 அன்று 5 மணியிருக்கும். என் சகோதரர் ரமணனுக்கு எங்கள் தோட்டத்து காவலர் ஆறுமுகம் போன் செய்து தோப்பில் கொன்று போட்டிருக்கிறார்கள், யார் என்று தெரியவில்லை என்றும், 3 பேர்கள் ஒடினார்கள் என்றும், நீங்கள் உடனடியாக வாருங்கள் என்றும் கூறினார். நான் கிராம நிர்வாக அலுவலம் என் வீட்டிற்கு அருகே உள்ளது. நான் அவரிடம் சென்று தகவல் கூறினேன். நான், எனது தம்பி ரமணன், கிராம நிர்வாகஅலுவலர், கிராம உதவியாளர் போஸ் ஆகிய நால்வரும் சம்பவயிடத்திற்கு போய் பார்த்தோம். கிராம நிர்வாக அலுவலர் போலிசாருக்கு தகவல் சொன்னார். போலிசார் வந்து விசாரித்தார்கள். நாங்கள் போனபோது ஆறுமுகமும், அழகுமலையும் அங்கு இருந்தார்கள். இறந்துபோனவரது கையில் எஸ். கே. வாள்முனை என்று பச்சை குத்தியிருந்தது. அவரது பேண்ட் பாக்கெட்டில் ஒரு டிரைவிங் லைசன்ஸ் இருந்தது. அதில் சாகுல் அமீது என்று பெயர் இருந்தது. என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறுவிசாரணை**

இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு,
அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து
பார்க்கப்பட்டு/சாட்சிக்கு வாசித்து காண்பித்து
அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்/கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி
மதுரை